NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2017

# TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER I

Time: 2 hours | 100 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 8 pages. Please check that your question paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. All answers must be in TAMIL.
5. It is in your own interest to write legibly and to present your work neatly.

---

IEB Copyright © 2017

## SECTION A

**QUESTION 1** பகுதி ஒன்று

**கீழ்வரும் கதையை நன்றாகப் படித்து பின்வரும் கேள்விகளுக்கு சரியான விடை தருக** :

*வாய்மெய்*

பள்ளிக்கூடத்தில் காந்தி பிறந்த நாள் விழா. காந்தி பிறந்த நாளை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வென்றவர்களுக்குப் பரிசு வழங்கும் நிகழ்ச்சி.

பரிசு பெறப்போகும் மாணவ மாணவிகள் மேடைக்கு அருகில் அமர்ந்திருந்தார்கள். அவர்களோடு கமலாவும் அமர்ந்திருந்தாள்.

'இவள்தான் எந்தப் போட்டியிலும் கலந்துகொள்ள வில்லையே...! ஏன் இங்கே உட்கார்ந்திருக்கிறாள்?' என்று பலரும் அவளை வியப்போடு பார்த்தார்கள்.

தலைமை ஆசிரியர் ஒலி வாங்கியின் (மைக்) முன்னால் வந்து நின்றார்.

"இந்த ஆண்டு, காந்தி பிறந்த நாளை முன்னிட்டுப் புதிதாக ஒரு பரிசை அறிமுகப்படுத்துகிறோம். 'சிறந்த வாய்மையாளர்' என்ற பட்டத்தோடு கூடிய பரிசுதான் அது! அந்தப் பரிசைப் பெறப்போவது யார் தெரியுமா?"

எல்லோரும் ஆவலோடு இருந்தார்கள்.

"நம் பள்ளியில் பத்தாம் வகுப்பில் படிக்கும் மாணவி கமலாதான், அந்தப் பரிசுக்கு உரியவர். இன்று பல மாணவியரை அழைத்து 'இன்று நீங்கள் பேணிய..., காத்த வாய்மை எது?' என்று கேட்டோம். ஒவ்வொருவரும் ஒரு பதிலைச் சொன்னார்கள். அதில் கமலாவின் பதில் பரிசுக்கு உரியதாக இருந்தது."

அவள் என்ன சொல்லியிருப்பாள்? எல்லோரும் கூர்மையாகக் கவனித்தனர்.

கமலா தன் தந்தையிடம் சொன்ன பதிலை விவரித்த தலைமை ஆசிரியர், "இந்தப் பதில்தான் எங்கள் இதயத்தை மகிழ்வித்த..., நெகிழ்வித்த பதிலாக இருந்தது. அதுமட்டுமன்று! 'இனிமேல் எந்தப் போட்டியாக இருந்தாலும் என் சொந்த முயற்சியைக் கொண்டே அதில் பங்கேற்பேன்' என்று கமலா

IEB Copyright © 2017

சொன்னது, அந்த வாய்மைக்கு மெருகூட்டுவதாக இருந்தது. எனவே, 'சிறந்த வாய்மையாளர்' என்ற பட்டத்தையும் பரிசையும் கமலாவுக்கு அளிக்கிறோம்..." என்று அறிவித்தார்.

அந்தப் பரிசை வாங்க, கமலா மேடையில் தோன்றியபோது மாணவர்கள் எழுப்பிய ஆரவாரம் பள்ளி முழுவதும் ஒலித்தது.

கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றிருந்தால்கூட கமலா அந்த அளவு மகிழ்ச்சியடைந்திருக்கமாட்டாள். என்றுமில்லாத மனநிறைவோடு அவள் வீட்டிற்குத் திரும்பினாள்.

கமலா முகம் சோர்ந்துபோய் வாட்டத்தோடு வீட்டுக்குத் திரும்புவாள் என்று நலங்கிள்ளி எதிர்பார்த்தார். அதற்கு மாறாக அவள் ஆடிப் பாடிக்கொண்டு வந்ததைப் பார்த்ததும் அவருக்கு ஒன்றும் புரியவில்லை.

"அப்பா..., 'வாய்மையே வெல்லும்'" என்றவள் பையிலிருந்து அந்தப் பரிசை எடுத்துக் காட்டினாள்.

அவர் மறுபடி வியப்புக்கு உள்ளானார். பரிசுபெற்ற விஷயத்தை விளக்கிய அவள், "அப்பா..., நானும் இனிமேல் காந்தியைப்போல வாய்மையைக் காத்து வாழப் போகிறேன் அப்பா..." என்றாள்.

அவருடைய வியப்பு இப்போது ஆனந்தமாக மாறியது.

(புதுச்சேரி பூதலூர் முத்து எழுதிய கதைக் கொத்திலிருந்து எடுக்கப்பட்டது)

1.1 **கோடிட்ட இடங்களில் சரியான சொற்களால் நிரப்புக:**

1.1.1 பள்ளிக்கூடத்தில் காந்தி ________________ விழா. (1)

1.1.2 அவர்களோடு ___________ அமர்ந்திருந்தாள். (1)

1.1.3 எல்லோரும் ____________ இருந்தார்கள். (1)

1.1.4 அந்த ___________________ மெருகூட்டுவதாக இருந்த்து. (1)

1.1.5 அவர் ________________ வியப்புக்கு உள்ளானார். (1)

1.2 **சரியான விடை தருக:**

1.2.1 யாருடைய பிறந்த நாள் விழா ? (2)

1.2.2 யார் மேடைக்கு அருகில் அமர்ந்திருந்தார்கள் ? (2)

1.2.3 தலைமை ஆசிரியர் ஒலி வாங்கி என்ன சொன்னார் ? (2)

1.2.4 யார் " சிறந்த வாய்மையாளர் " பரிசை பெற்றது ? (2)

1.2.5 என்ன பள்ளி முழுவதும் ஒலித்தது ? (2)

1.2.6 பையிலிருந்து கமலா அப்பாவுக்கு என்ன எடுத்துக் காட்டினாள் ? (2)

1.3 **எது " உண்மை " எது " உண்மை அல்ல " என்று எழுதுக:**

1.3.1 இந்தக் கதை, காந்தியின் பிறந்த நாள் விழாவைப்பற்றி. (1)

1.3.2 கமலாவை யாரும் பாராட்டவில்லை. (1)

1.3.3 கமலாவுக்கு பொய்சொல்ல பிடிக்காது. (1)

1.3.4 தலைமை ஆசிரியர்க்கு கமலாவின் நேர்மை பிடிக்கவில்லை. (1)

1.3.5 கமலா எல்லோருக்கும் ஒரு நல்ல பாடத்தைக் கற்பித்தாள். (1)

1.4 **ஒருமைக்குப் பன்மை தருக:** உ ம்: பெட்டி - பெட்டிகள்

1.4.1 பரிசு (1)

1.4.2 போட்டி (1)

1.4.3 மரம் (1)

1.4.4 பதில் (1)

1.5 **எதிர்ச் சொல் தருக:** உ ம்: அங்கே - இங்கே

1.5.1 பொய்மை (1)

1.5.2 கேள்வி (1)

1.5.3 இது (1)

1.5.4 மேல் (1)

IEB Copyright © 2017

1.6 **கீழ்வரும் பகுதியைப் படித்து சரியான விடை தருக:**

நீண்ட நேரத்திற்குப் பிறகு புயல் காற்றின் சீற்றம் ஒருவாறு அடங்கியது. கமிடி கண் விழித்துப் பார்த்தான். தான் ஒரு தீவின் கரையில் ஒதுங்கிக் கிடப்பதை அறிந்தான். அப்போதுதான் அவனுக்குத் தான் புயலில் சிக்கியது நினைவுக்கு வந்தது. கமிடி மெதுவாக எழுந்தான். அந்தத் தீவின் நடுவே இருந்த சுமார் பதினைந்து குடிசைகளைக் கண்டான். அவற்றுள் மிகவும் பெரியதாகக் காணப்பட்ட ஒரு குடிசையை நோக்கிச் சென்றான். அந்தக் குடிசைக்குள் மெல்ல எட்டிப் பார்த்தான். அந்தக் குடிசையில் சில உருவங்கள் நடமாடுவதைக் கண்டான்.

பாடநூலாக்கக் குழு

மூத்த பாடத்திட்ட சிறப்பு அதிகாரி:
எஸ். டேனியல்

1.6.1 பெயர்ச் சொல் என்றால் என்ன? (1)

1.6.2 மேற்காணும் பகுதியிலிருந்து நான்கு(4) பெயர்ச் சொற்கள் தருக. (4)

1.6.3 மேற்காணும் பகுதியிலிருந்து இரண்டு(2) வினைச்சொற்கள் தருக. (2)

1.7 **சேர்த்து எழுதுக**

1.7.1 மன + பாடம் (1)

1.7.2 கட்டுரை + போட்டி (1)

1.7.3 அந்த + கட்டிடம் (1)

1.7.4 சொன்ன + சொல் (1)

1.8 **பிரித்து எழுதுக**

1.8.1 பத்துப் பக்கம் (1)

1.8.2 இரண்டாயிரம் (1)

1.8.3 தேசியப் பாடல் (1)

1.8.4 வாங்கிக் கொண்டான் (1)

1.9 **ஆண்பாலுக்கு பெண்பால் தருக:**

1.9.1 மகன் (1)

1.9.2 சிறுவன் (1)

1.9.3 ஆசிரியர் (1)

1.9.4 நடிகன் (1)

1.9.5 பிச்சைக்காரன் (1)

1.10 **வரிசைப் படுத்தி எழுதுக:**

**உ ம்:** மரம் அது ஒரு பெரிய

= அது ஒரு பெரிய மரம்.

1.10.1 வந்தேன் நான் வீட்டுக்கு நேற்று உன் (1)

1.10.2 ஒரு காட்டு சிங்கம் விலங்கு பயங்கரமான (1)

1.10.3 பிதா குரு தெய்வம் மாதா (1)

1.10.4 மொழி தாய் தமிழ் நமது (1)

1.10.5 ஏழு ஒரு வாரத்தில் உள்ளன நாட்கள் (1)

1.11 **கடந்த காலத்தில் எழுதுக:**

**உ ம்:** நீ வருவாய் = நீ வந்தாய்

1.11.1 நீ ஓடுகிறாய் (1)

1.11.2 நான் பாடுகிறேன் (1)

1.11.3 நீ நட (1)

1.11.4 நான் பார்க்கிறேன் (1)

1.11.5 அவள் பிடிக்கிறாள் (1)

**60 marks**

IEB Copyright © 2017

## SECTION B

## QUESTION 2 பகுதி இரண்டு

2.1 கொன்றை வேந்தன் விளக்கக் கதைகள்

**கீழ்வரும் கதையை 8.- 10 வரிகளில் முடிவு செய்க:**

ஓர் ஊரில் பச்சையப்பன் ஒருவன் இருந்தான் . . . . . . . . . . . (10)

2.2 முடிவு செய்க:

2.2.1 அன்னையும் பிதாவும் . . . . . . . . . . (2)

2.2.2 உண்டி சுருங்குதல் . . . . . . . . . . . . (2)

2.3 திருக்குறள்

**கொடுக்கப் பட்டுள்ள பகுதிகளைப் பயன் படுத்தி கீழ்வரும் குறள்களை முடிவு செய்க:**

2.3.1 அகர முதல எழுத்தெல்லாம் . . . . . . . . . . . . . . . . (2)

2.3.2 மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் . . . . . . . . . (2)

2.3.3 பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் . . . . . . . . . . (2)

2.3.4 துப்பார்க்கு துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் . . . . . . (2)

2.3.5 கற்க கசடறக் கற்பவை; கற்றபின் . . . . . . . . . . . . . (2)

நிற்க அதற்கு தக . ஆதிபகவன் முதற்றே உலகு . இறைவன் அடிசேரா தார்.

நிலமிசை நீடுவாழ் வார் . துப்பாய தூஉம் மழை .

**[24]**

IEB Copyright © 2017 

## QUESTION 3 குயில் பாட்டு

**கீழ்வரும் வரிகளை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக:**

பெண்ணால் அறிவிழக்கும் பித்தரெலாங் கேண்மினோ!
காதனைப் போற்றும் கவிஞரெலாங் கேண்மினோ!
மாதரெலாங் கேண்மினோ! வல்விதியே கேளாய் நீ!
மாயக் குயிலோர் மரக்கிளையில் வீற்றிருந்தே
பாயும் விழிநீர் பதைக்கும் சிறியவுடல்
விம்மிப் பரிந்துசொலும் வெந்துயர்ச்சொல் கொண்டதுவாய்
அம்மவோ! மற்றாங்கோர் ஆண்குரங்கு தன்னுடனே
ஏதேதோ கூறி இரங்கும் நிலைகண்டேன்
தீதேது? நன்றேது? செய்கைக் தெளிவேது?
அந்தக் கணமே அதையும் குரங்கினையும்
சிந்தக் கருதி உடைவாளில் கைசேர்ந்தேன்
கொன்றுவிடு முன்னே குயிலுரைக்கும் வார்த்தைகளை
நின்று சற்றே கேட்பதற்கென் நெஞ்சம் விரும்பிடவும்
ஆங்கவற்றின் கண்ணில் அகப்படா வாறருகே
ஓங்கு மரத்தின்பால் ஒளிந்துநின்று கேட்கையிலே
பேடை குயிதனைப் பேசியது 'வானரரே!

(குயில் பாட்டு)

3.1 மேற்காணும் வரிகளை எழுதியவர் யார்? (2)

3.2 இப்பாட்டில் வரும் விலங்குகள் யாவை? (2)

3.3 எந்த பறவையைப் பற்றி இப்பாட்டு எழுதியுள்ளது? (2)

3.4 மாடன் யார்? (2)

3.5 மறுபிறப்பில் குரங்கன் எவ்வாறு பிறந்தான்? (2)

3.6 சின்ன குயிலியைப் பற்றி 4 - 5 வரிகள் எழுதுக. (6)

**[16]**

**40 marks**

**Total: 100 marks**

IEB Copyright © 2017